24.02.2025

O.S.No.253/2022

பி.வா.சா.1.திரு.வருண் த.பெ. ராஜேந்திரன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் 2 ம் பிரதிவாதி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. 09.07.2021 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் (அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 02.12.2002 தேதியிட்ட பவர் பத்திரம் சான்றிட்ட நகல் (அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 28.11.1980 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் (அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.**3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 18.11.1993 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் (அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.**4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 30.04.2021 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் (அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.**5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 15.06.2021 தேதியிட்ட சீர்திருத்த பத்திரம் சான்றிட்ட நகல் (அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.**6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 24.02.2023 தேதியிட்ட சீர்திருத்த பத்திரம் சான்றிட்ட நகல் (அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.**7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) ( பி.வா.சா.ஆ 1, பி.வா.சா.ஆ 5 முதல் பி.வா.சா.ஆ 7 வரையான ஆவணங்கள் மோசடியான பத்திரங்கள் என்ற வாதிதரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

**(**குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது**)**